**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.48/2017**

**Prosecution witness : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சக்கரவர்த்தி | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**( Accused present)**
**08.02.2023**

**முதல் விசாரணை**

நான் திருநகர் ஜோசப் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் பணி செய்து வருகிறேன். புகார் தாரர் சாட்சி மனோகரன் எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். அவர் இறந்துவிட்டார். ஆஜர் எதிரி தனபாண்டி ஆவார். எனது அண்ணன் மனோகரன் ஆஜர் எதிரி மற்றும் மற்றொரு நபரான பாண்டியன் என்பவரிடம் டி.புதுப்பட்டி என்ற இடத்தில் உள்ள சர்வே எண்.187/5, என்ற இடத்திற்கு மொத்த இடம் சுமார் ஒரு ஏக்கர் 35 சென்ட் அளவுள்ள இடத்திற்கு 2009 வது வருடம் பவர் பத்திரம் எனது அண்ணன் மனோகரன் எழுதி வாங்கினார். எனது அண்ணனும் அந்த சமயத்தில் ரியல்எஸ்டேட் பணி செய்து வந்தார். ரூ.15 லட்சத்தி 50 ஆயிரம் கொடுத்து மேற்படி பவர் பதியப்பட்டது. நாங்கள் மேற்படி இடத்தை பிளாட்டுகளாக பிரித்து விற்பதற்கு முன்பே துரைபாண்டியன் பாண்டியன் இடத்தையும் சேர்த்து எனது அண்ணன் மனோகரனின் கையெழுத்தை பொய்யாக போட்டு ஆஜர் எதிரிக்கு அதே 2009 வது வருடம் கிரையம் செய்துவிட்டார். சாட்சி தற்போது மேற்படி இடத்தின் சர்வே எண் 13/8 என கூறுகிறார். மேற்படி கிரையம் செய்யும் போது எனது அண்ணனுக்கான கிரையம் ரத்து செய்யப்படவில்லை. மேற்படி சம்பவம் குறித்து எனது அண்ணன் மனோகரன் தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**